***அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை***

Ang Mo Kio Tamil Methodist Church

***28 ஜனவரி 2024 ஞா யிறு ஆராதனை***

***28th January 2024 Sunday Service***

***ETAC Thanksgiving Sunday***

| | |
|---|---|
| ✝ ***ஆராதனைக்கு அழைப்பு*** Call to Worship | ***திருமதி. இவாஞ்சலின் திவ்யா*** Mrs. Evangeline Divya |
| ***இறைவணக்கப்பாடல்*** Introit | Choir ***பாடகர் குழு*** |
| ***ஜெபம்*** Prayer | ***திருமதி. இவாஞ்சலின் திவ்யா*** Mrs. Evangeline Divya |
| ✝ ***தொடக்க பாடல்*** Opening Song | ***சபையார் இணைந்து*** Congregation |

***எத்தனை நாவால் பாடுவேன்***

1.எத்தனை நாவால் பாடுவேன்
என் மீட்பர் துதியை!
என் ஆண்டவர் என் ராஜனின்
மேன்மை மகிமையை!

2. பாவிக்கு உந்தன் நாமமோ
ஆரோக்கியம் ஜீவனாம்:
பயமோ துக்க துன்பமோ
ஓட்டும் இன்கீதமாம்

3. உமது சத்தம் கேட்குங்கால்
மரித்தோர் ஜீவிப்பார்:
புலம்பல் நீங்கும் பூரிப்பால்
நிர்ப்பாக்கியர் நம்புவார்

4. ஊமையோர்,
செவிடோர்களும்,
அந்தகர் ஊனரும்,
உம் மீட்பர்! போற்றும்!
கேட்டிடும்!
நோக்கும்! குதித்திடும்.

| | |
|---|---|
| ✝ ***மாறி வாசித்தல் 4ம் ஞாயிறு தேவ ஆராதனை புத்தகம்*** பக்கம் *19* “சங்கீதம் 16” | ***சபையார் இணைந்து*** Congregation |

“தேவனே, என்னைக் காப்பாற்றும்”

Psalter Reading –Page 19 “Psalm 16”

| | |
|---|---|
| ✝ ***தந்தை போற்றி*** Gloria Patri | ***சபையார் இணைந்து*** Congregation |
| ***துதி ஆராதனை*** Singspiration | |
| ***ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்*** Thanksgiving & Pastoral Prayer | ***மறைதிரு. விஜய் ஜோஸப்*** Rev. Vijay Joseph |
| ***பரமண்டல ஜெபம்*** Lord’s Prayer | ***சபையார் இணைந்து*** Congregation |
| ***சிறப்பு பாடல்*** Special Song | ***பாடகர் குழு*** Choir |
| ✝ ***காணிக்கை பாடல்*** Offertory Song | ***சபையார் இணைந்து*** Congregation |

சீர்மிகு வான்புவி தேவா தோத்ரம்

1.சீர்மிகு வான்புவி தேவா தோத்ரம்
சிருஷ்டிப்பு யாவையும் படைத்தாய் தோத்ரம்
ஏர்குணனே தோத்ரம் அடியாருக்கு
இரங்கிடுவாய் தோத்ரம் மா நேசா.

2.நேர் மிகு அருள் திரு அன்பா தோத்ரம்
நித்தமு முமக் கடியார்களின் தோத்ரம்
ஆர் மணணே தோத்ரம் உனது
அன்பனுக்கே தோத்ரம் மா நேசா.

3.ஜீவன் சுகம் பெலன் யாவுக்கும் தோத்ரம்
தினம் தினம் அருள்
நன்மைக்காவும் தோத்ரம்
ஆவலுடன் தோத்ரம் உனது
அன்பினுக்கே தோத்ரம் மா
நேசா

4.ஆத்தும நன்மைகட்காகவும் தோத்ரம்
அதிசய நடத்துதற்காகவும் தோத்ரம்
சாற்றுகிறோம் தோத்ரம் உனது
தபுமன்புக்கே தோத்ரம் மா நேசா

5.மாறாய் பூரண நேசா தோத்ரம்
மகிழொடு ஜெபமொழி
மாலையின் தோத்ரம்
தாராய் துணை தோத்ரம் இந்தத்
தருணமே கொடு தோத்ரம் மா நேசா

| | |
|---|---|
| ✝ ***பூலோகத்தாரே யாவரும்*** Doxology | ***சபையார் இணைந்து*** Congregation |

✝ ***திருமறைப் பாடம்*** — ***திருமதி. ஜூலியட் சதீஷ்***
Scripture Reading — Mrs.Juliet Satish
***பிலிப்பியர் 4 : 4 - 8***
Philippians 4:4-8

***அருளுரை*** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Sermon — Rev. Vijay Joseph

✝ ***அர்ப்பணகீதம்*** — ***சபையார் இணைந்து***
Offertory & Closing Song — Congregation

<u>இயேசு என்ற திரு நாமத்திற்கு</u>

இயேசு என்ற திரு நாமத்திற்கு
எப்போதுமே மிக ஸ்தோத்திரம்

1. வானிலும் பூவிலும் மேலான நாமம்
   வல்லமையுள்ள நாமமது
   துயர் சொல்லித் துதித்திடும் நாமமது (2)

2. வேதாளம் பாதாளம் யாவையும் ஜெயித்த
   வீரமுள்ள திருநாமமது
   நாமும் வென்றிடுவோமிந்த நாமத்திலே (2)

3. பாவத்திலே மாளும் பாவியை மீட்க
   பாரினில் வந்த மெய் நாமமது
   பரலோகத்தில் சேர்க்கும் நாமமது (2)

4. உத்தம பக்தர்கள் போற்றித் துதித்திடும்
   உன்னத தேவனின் நாமமது
   உலகெங்கும் ஜொலித்திடும் நாமமது (2)

5. சஞ்சலம் வருத்தம் சோதனை நேரத்தில்
   தாங்கி நடத்திடும் நாமமது
   தடை முற்றுமகற்றிடும் நாமமது (2)

***அறிவிப்புகள்***
Announcements

<u>மனப்பாட வசனங்கள்</u>
<u>Weekly Memory Verses</u>

✝ மனப்பாட வசனங்கள் — ***சபையார் இணைந்து***
Weekly Memory Verses — Congregation
***பிலிப்பியர் 4 : 8***
Philippians 4 : 8

***8. கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்.***

✝ ***முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்*** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Closing Prayer & Benediction — Rev. Vijay Joseph

✝ ***ஆசீர்வாதப் பாடல்***
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும்*** ⁄ Indicates Congregation standing